# பத்திரிக்கைச் செய்தி.

அரியலூர் மாவட்டம் ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா நிறுவனத்தின் (SBI RSETI) மூலம் ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) சார்பாக பெண்கள் சிறு தொழில் முனைவோர் தொழில்முறை கற்றல் பட்டறை பயிற்சி முகாம் ஆசிய வளர்ச்சி வங்கி தலைமையாளர் **திரு.விக்ராத் சவ்வுல்** அவர்கள் தலைமையில் இன்று (23.01.2018) நடைபெற்றது.

இதில் ஏற்கனவே இந்நிறுவனத்தால் பயிற்சிப்பெற்ற 70-க்கும் மேற்பட்ட பெண் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சி முகாமில் மத்திய மற்றும் மாநில அரசுத்திட்டங்களை பற்றி மகளிர் திட்டம், மாவட்ட தொழில் மையம், தாட்கோ மற்றும் கதர் கிராம தொழில் மையம் ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து இப்பயிற்சி முகாமில் பெண்கள் தொழில் முனைவோருக்கான திட்டங்கள் குறித்து விரிவாக கூறப்பட்டது.

இம்முகாமில், ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா நிறுவனத்தின் (SBI RSETI) மூலம் பயிற்சி பெற்ற பெண்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் கண்காட்சி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) அ.லலிதா, அரியலூர் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ்.இளஞ்சேரன், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் V.G.வெங்கிடாசலம் மற்றும் அலுவலர்கள், பெண்கள் தொழில் முனைவோர்கள் கலந்துகொண்டனர்.